**வடமாகாணக் கல்வித் திணைக்களத்துடன் இணைந்து**
**தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்**
**தவணைப் பரீட்சை, மார்ச் - 2020**

**Conducted by Field Work Centre, Thondaimanaru**
**In Collaboration with Provincial Department of Education**
**Northern Province**
**Term Examination, March - 2020**

FWC

| தரம் :- 13 (2020) | கிறிஸ்தவம் I | இரண்டு மணித்தியாலம் |
|---|---|---|

## பகுதி – I

❖ **மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

01. யூதர்கள் இணைத்திருமறை நூல்களைப் பயன்படுத்துவதை தவிர்த்துவிட்டனர் எனக் குற்றம் சாட்டியவர்.
1) புனித ஜஸ்ரின் 2) புனித ஒரிஜன் 3) புனித அகுஸ்தின்
4) புனித கிளமன்ட் 5) புனித சிறில்

02. பொதுமக்களின் பிரதி என்ற பொருளைக் கொடுக்கும் மொழி பெயர்ப்பு
1) தனாக் 2) தர்கும் 3) வல்கேற்
4) செப்துவாஜிந் 5) மசரோட்டிக்

03. திருவிவிலியத்தின் பிரதான ஆசிரியர் இறைவன், துணை ஆசிரியர் மனிதன் எனத் திருத்தந்தை 13 ஆம் லியோ குறிப்பிடும் சுற்றுமடல்.
1) மனித உழைப்பு 2) இறை பராமரிப்பு 3) அன்னையும் ஆசிரியையும்
4) அவனியில் அமைதி 5) தொழிலாளர் நிலமை

04. பாலஸ்தீனா நாட்டின் முதுகெலும்பாக அமைந்த பிரதேசம்.
1) கடற்கரை சமவெளி 2) யோர்தான் பள்ளத்தாக்கு 3) கலிலேய மலைப்பிரதேசம்
4) யூதா மலைப்பிரதேசம் 5) மேற்கு மலைத்தொடர்

05. இஸ்ரயேல் மக்கள் எகிப்தில் வாழ்ந்த காலம்.
1) 450 வருடங்கள் 2) 420 வருடங்கள் 3) 400 வருடங்கள்
4) 430 வருடங்கள் 5) 440 வருடங்கள்

06. இறைவாக்கினர் இலக்கியத்தில் அதிக தாக்கத்தை ஏற்படுத்திய மரபு.
1) J மரபு 2) D மரபு 3) E மரபு
4) P மரபு 5) J, E மரபுகள்

07. படைப்புத் தொடர்பான இரண்டாவது கதைக்குப் பின்னணியாக அமைவது.
1) படைப்புப் பற்றிய 1 ஆம் கதை 2) விடுதலைப் பயணம்
3) குலமுதுவர் வரலாறு 4) கில்கமேஸ் இலக்கியம்
5) சீனாய் உடன்படிக்கை

08. இறைவன் ஆபிரகாமோடு செய்து கொண்ட உடன்படிக்கையில் (தொ.15:17) புகைந்து கொண்டிருக்கும் தீச்சட்டியும், எரிந்து கொண்டிருக்கும் தீப்பந்தமும் அடையாளப்படுத்துவது.
1) தூய்மையை 2) தூதர்களை 3) மேன்மையை
4) இறைவனை 5) தண்டணையை

09. விருத்தசேதனம் செய்யும் பழக்கம் ஆரம்பத்தில் எங்கு காணப்பட்டது.
1) அசீரியா 2) அராபியா 3) கிரேக்கம்
4) பபிலோனியா 5) எகிப்து

10. "யோசேப்பை முன்பின் அறிந்திராத புதிய மன்னன் ஒருவன் எகிப்தில் தோன்றினான்" என யாரைப்பற்றி கூறப்படுகின்றது.
1) 2 ஆம் இராம்சேஸ் 2) பார்வோன் 3) 1 ஆம் அமோசிசு
4) கைக்கோசு 5) 4 ஆம் கோட்டப்பு

11. பத்துப் பெரும் துன்பங்களின் நோக்கமாக அமைவது.
1) எகிப்தியரை அழிப்பது.
2) இஸ்ரயேலருக்கு நம்பிக்கையைக் கொடுப்பது.
3) எகிப்தியத் தெய்வம் பொய் என்பதை நிரூபிப்பது.
4) பார்வோனின் தலைக்கனத்தை சாடுவது.
5) இறைவனின் அதிகாரத்தைப் பார்வோனுக்கும் எகிப்தியருக்கும் வெளிப்படுத்துவது.

12. கன்னி கருவுற்று ஓர் ஆண் மகனைப் பெற்றெடுப்பார். அவருக்கு இம்மானுவேல் என்று பெயரிடுவார் எனக்கூறி இறைவாக்குரைத்த இறைவாக்கினர்.
1) ஆமோஸ் 2) ஓசேயா 3) எரேமியா
4) எசாயா 5) எசேக்கியேல்

13. திருப்பாடல்கள் தொடர்பாக ஆழமான ஆய்வை முதன் முதலில் மேற்கொண்டவர்.
1) ஹேமன்குண்கள் 2) ஆத்தர் வைசர் 3) சிக்மன்
4) றிச்சட் சீமோன் 5) வெல்காசன்

14. இயேசுவின் காலத்தில் அரசியல் குழுவாகச் செயற்பட்டவர்கள்.
1) பரிசேயர் 2) ஏரோதியர் 3) எசேனியர்
4) சதுசேயர் 5) செலஸ்தியர்

15. சினகொக் என்ற கிரேக்கச் சொல்லின் பொருள்.
1) ஆலயம் 2) பலி செலுத்துபவர் 3) ஒன்றுகூடல்
4) பிரிந்திருப்பவர் 5) அன்னியர்

16. யூதர்களின் வாய்மொழிச் சட்டம் எவ்வாறு அழைக்கப்பட்டது.
1) தால்மூட் 2) மிஸ்னா 3) தோரா
4) தார்கும் 5) மரபுகள்

17. சமநோக்கு நற்செய்தி நூல்களில் இயேசுவின் தூதுப்பணியின் மைய இடமாக அமைவது.
1) கலிலேயா 2) யூதேயா 3) எருசலேம் 4) சமாரியா 5) கானா

18. புனித பவுலின் முதலாவது தூதுரைப் பயணத்தின் போது பாப்போவில் மனந்திரும்பிய ஆட்சியாளர் யார்?
1) மந்திரவாதி சீமோன் 2) பிலமோன் 3) செர்க்கியு பவுல்
4) ஓனேசிம் 5) தெமேத்திரியு

19. எருசலேம் பொதுச்சங்கத்திற்கு தலைமை தாங்கியவர்.
1) பேதுரு 2) பவுல் 3) பெரிய யாகப்பர்
4) சின்ன யாகப்பர் 5)யோவான்

20. சமநோக்கு நற்செய்திப் பிரச்சினைக்கான தீர்வாக இரு மூலக் கொள்கையை முன்வைத்தவர்.
1) கிராப் 2) றிச்சட் சீமோன் 3) வெல்கவுசன்
4) கியு 5) உவயில்

21. உரோமைக் குடியுரிமையைப் புனித பவுல் பெற்றுக் கொண்டது.
1) கடின உழைப்பால் 2) சிறந்த கல்வியால் 3) தந்தையின் வழியில்
4) தாயின் வழியில் 5) பணத்தைக் கொடுத்து

22. பிறவியிலேயே கால் ஊனமுற்ற ஒருவரை பவுல் குணமாக்கியது.
1) கொரிந்தில் 2) லிஸ்திராவில் 3) எபேசில்
4) பிலிப்பியில் 5) தெசலோனிக்காவில்

23. புனித பவுல் உரோமையருக்கு திருமுகத்தை எழுதியது.
1) எபேசிலிருந்து 2) தெசலோனிக்காவிலிருந்து 3) பிலிப்பியிலிருந்து
4) கொரிந்திலிருந்து 5) கலாத்தியாவிலிருந்து

24. பேறுபெற்றோர் என்பதைக் குறிக்கும் கிரேக்கச் சொல்.
1) மக்காரியோயி 2) செமயோன் 3) சார்க்ஸ்
4) லோகோஸ் 5) த்ரோகயின்

25. கயபா தலைமைக் குருவாகப் பணியாற்றிய காலம்.
1) கி.பி 18 – 26 2) கி.பி 20 – 30 3) கி.பி 20 – 25
4) கி.பி 18 – 30 5) கி.பி 18 – 36

26. புனித பவுல் திருமண வாழ்வு பற்றிக் கூறும் திருமுகம்.
1) உரோமையர் 2) பிலிப்பியர் 3) தெசலோனிக்கர்
4) எபேசியா 5) பிலமோன்

27. இயேசு திருமுழுக்கு யோவானிடம் திருமுழுக்குப் பெற்று தண்ணீரிலிருந்து கரைக்கு வந்த போது வானம் திறக்கப்பட்டதன் மூலம் தெளிவாவது.
1) அவர் இறைமகன் என்பது.
2) அவர் பாவிகளோடு பாவியாகக் கருதப்பட்டார் என்பது.
3) விண்ணுக்கும் மண்ணுக்குமிடையே ஒரு தொடர்பாடல் இடம்பெற்றது என்பது.
4) அவர் எந்தப் பாவமும் செய்யாதவர் என்பது.
5) அவர் இறைவனிடமிருந்து வந்தவர் என்பது.

28. ‘மென்று உண்ணுதல்’ என்பதைக் குறிக்கும் கிரேக்கச் சொல்.
1) சார்க்ஸ் 2) காயிரோஸ் 3) அகபே
4) மத்தாரெஸ் 5) த்ரோகயின்

29. இயேசு திவ்விய நற்கருணையை ஏற்படுத்தியது தொடர்பாக புதிய ஏற்பாட்டிலுள்ள மிகப் பழமையான அறிக்கை.
1) கொரிந்தியருக்கு எழுதிய திருமுகம் 2) லூக்கா நற்செய்தி
3) மத்தேயு நற்செய்தி 4) மாற்கு நற்செய்தி
5) யோவான் நற்செய்தி

30. ‘உங்கள் பலி தூய பலியாக இருப்பதற்கு முதலில் நீங்கள் ஒப்புரவின் பின்னர் ஒன்று கூடி அப்பத்தைப் பிட்டு நன்றி கூறுங்கள்” என நற்கருணை பற்றிக் குறிப்பிடும் நூல்.
1) அப்பலோஜியா 2) டிடாக்கே 3) யோவான் நற்செய்தி
4) கொரிந்தியர் திருமுகம் 5) ஹெக்சப்லா

31. திருத்தூதரான பெரிய யாக்கோபுவைக் கொலை செய்தவர்.
1) பெரிய ஏரோது 2) ஏரோது ஆர்க்கலா 3) ஏரோது பிலிப்பு
4) 1 வது ஏரோது அகிரிப்பா 5) ஏரோது அந்திப்பா

32. சமாரியாவில் திருத்தொண்டர் பிலிப்புவின் பணியினால் மனர்திரும்பி திருச்சபையில் சேர்ந்தவர்.
1) செர்க்கியு பவுல் 2) மந்திரவாதி பாரேசு 3) லீதியாள்
4) தெமேத்திரியு 5) மந்திரவாதி சீமோன்

33. கிறிஸ்தவர்களுக்கு எதிராக துன்புறுத்தல்களை ஆரம்பித்த முதலாவது உரோமையப் பேரரசன்.
1) நீரோ 2) திராஜன் 3) தொமீசியன்
4) அவுரேலியன் 5) கலேரியு

34. அந்தியோக்கிய ஆயரான புனித இஞ்ஞாசியார் கொடிய விலங்குகளுக்கு இரையாக்கப்பட்டது.
1) நான்காவது கலாபனையில் 2) மூன்றாவது கலாபனையில் 3) இரண்டாவது கலாபனையில்
4) ஐந்தாவது கலாபனையில் 5) முதலாவது கலாபனையில்

35. திருச்சபையின் மறை மாமேதைகளில் ஒருவராகக் கருதப்படுபவர்.
1) பாப்பியர் 2) கிளமெண்ட் 3) கிரகோரி
4) கிரேனியுஸ் 5) அத்தனாசியார்

36. ‘அப்போலோஜியா’ என்பதன் பொருள்.
1) மறையுண்மைகள் 2) பாதுகாப்பது 3) போதனைகள்
4) சீர்திருத்தம் 5) கற்பிப்பது

37. கத்தோலிக்க திருச்சபையின் மரபு ரீதியான நம்பிக்கையின் தந்தை என அழைக்கப்பட்டவர்.
1) அத்தனாசியார் 2) புனித ஜெரோம் 3) புனித சிறில்
4) புனித அகுஸ்தீனார் 5) ஓரிஜன்

38. கிறிஸ்தவ இலத்தீன் இலக்கியத்தின் தந்தை என அழைக்கப்படுபவர்.

1) தெர்த்தூலியன் 2) ஓரியன் 3) புனித யஸ்ரின்
4) புனித சிறில் 5) உரோமை கிளமென்ட்

39. ஆரிய பேதகம் முன்வைக்கப்பட்டது.

1) கி.பி 325 இல் 2) கி.பி 318 இல் 3) கி.பி 314 இல்
4) கி.பி 323 இல் 5) கி.பி 313 இல்

40. எபேசு பொதுச்சங்கத்திற்கு தலைமை தாங்கியவர்

1) திருத்தந்தை செலஸ்தீன் 2) திருத்தந்தை சில்வெஸ்ரர் 3) ஆயர் கோசியஸ்
4) திருத்தந்தை சிங்கராயர் 5) ஆயர் சிறில்

41. மிலான் அரச சாசனத்தை ஏற்படுத்தியவர்.

1) பேரரசர் யஸ்ரின் 2) பேரசர் கொன்ஸ்தாந்தின் 3) பேரசர் மாக்சென்ஸ்
4) பேரசர் கலேரியு 5) பேரசர் தியோடேசியஸ்

42. ஐந்தாம் நூற்றாண்டில் உரோமையில் ஏற்பட்ட நிலையற்ற அரசியலினால் பாதிக்கப்பட்ட கிறிஸ்தவ மக்களுக்கு உடல் மற்றும் ஆன்மீக ரீதியில் ஊட்டமளித்து வழிகாட்டியவர்.

1) திருத்தந்தை 1 ஆம் லியோ 2) திருத்தந்தை கிரகோரி 3) திருத்தந்தை சிங்கராயர்
4) திருத்தந்தை பிரான்ஸ் 5) திருத்தந்தை பயஸ்

43. புனித பெனடிக் துறவற சபையினரால் ஒழுங்கு செய்யப்பட்ட திருவழிபாட்டு இசையை முழுத்திருச்சபைக்கும் பொருத்தமான முறையில் ஒழுங்கு செய்தவர்.

1) புனித அகுஸ்தீனார் 2) திருத்தந்தை சிங்கராயர் 3) திருத்தந்தை கிரவோரி
4) சாள்ஸ் மன்னன் 5) புனித பொனிபஸ்

44. திருச்சபை வரலாற்றில் திருச்சபை இராட்சியமொன்று உருவாக்கியது.

1) ஐந்தாம் நூற்றாண்டில் 2) எட்டாம் நூற்றாண்டில் 3) நான்காம் நூற்றாண்டில்
4) ஆறாம் நூற்றாண்டில் 5) ஏழாம் நூற்றாண்டில்

45. கி.பி 910 இல் ஆரம்பிக்கப்பட்ட துறவற சபை.

1) கார்தூசியன் துறவற சபை 2) கமல்டோலெஸ் துறவற சபை
3) அகுஸ்தீனார் துறவற சபை 4) குளூனி துறவற சபை
5) கார்மேல் துறவற சபை

46. இறையியல் என்பது விளக்கத்தினைத் தேடிச்செல்லும் விசுவாசமாகும் எனக் கூறியவர்.

1) புனித அன்சலம் 2) புனித அகுஸ்தீனார் 3) புனித ஜஸ்ரின்
4) பீற்றர் லெம்பட் 5) புனித தோமஸ் அக்குவைனாஸ்

47. 'கிறிஸ்தவ மதக்கோட்பாடுகள்' என்னும் நூலை வெளியிட்டவர்.

1) மாட்டின் லூதர் 2) ஜோன் கல்வின் 3) ஹுல்ரிச் சுவிங்ளி
4) பீற்றர் கனிசியஸ் 5) புனித அகுஸ்தீனார்

48. பன்னிரெண்டாம் நூற்றாண்டில் கார்மேல் மலையில் ஆரம்பமான துறவற வாழ்வு முறையை இங்கிலாந்தில் அறிமுகம் செய்தவர்.

1) புனித அவிலாதிரேசா 2) புனித சிலுவை அருளப்பர் 3) புனித சைமன் ஸ்டொக்
4) புனித பிரான்ஸ் 5) மத்தேயு டீ பஸ்ஸி

49. திரிதெந்தின் பொதுச்சங்கத்தைக் கூட்டிய திருத்தந்தை.

1) 7 ஆம் பயஸ் 2) 23 ஆம் யோவான் 3) 10 ஆம் பத்தினாதர்
4) மூன்றாம் பவுல் 5) 4 ஆம் கிரகோரி

50. மனித மாண்பு மதிக்கப்பட வேண்டுமென்றும் ஏழைகள், பணக்காரர் என்ற ஏற்றத்தாழ்வு மறைய வேண்டும் என்றும் எடுத்துரைத்த சுற்றுமடல்.

1) அவனியில் அமைதி 2) மனித உழைப்பு 3) தொழிலாளர் சாசனம்
4) மனித முன்னேற்றம் 5) அன்னையும் ஆசிரியையும்

(50x2=100 புள்ளிகள்)

**வடமாகாணக் கல்வித் திணைக்களத்துடன் இணைந்து**
**தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்**
**தவணைப் பரீட்சை, மார்ச் - 2020**
**Conducted by Field Work Centre, Thondaimanaru**
**In Collaboration with Provincial Department of Education**
**Northern Province**
**Term Examination, March - 2020**

FWC

| தரம் :- 13 (2020) | கிறிஸ்தவம் II | நேரம் :- மூன்று மணித்தியாலம் |
|---|---|---|

## பகுதி II

❖ **பகுதி 'I' இலிருந்து இரண்டு வினாக்களையும் பகுதி II இலிருந்து மூன்று வினாக்களையும் தெரிவு செய்து எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

## பகுதி I

01. 1) ஐந்நூலில் ஒரே செய்தியை மீண்டும் மீண்டும் கூறுதல். மற்றும் பயன்படுத்தும் மொழியில் முரண்பாடுகள் காணப்படுகின்றன என்பதற்கு இரு விடயங்கள் தருக.
  2) மனிதன் இறைவனுக்கெதிராகப் பாவம் செய்து தண்டனை பெற்றாலும் இறைவன் அவனைக் கைவிடுவதில்லை என்பதற்கு இரு காரணிகள் தருக.
  3) குலமுதுவர் யாக்கோபு தன் மகன் யோசேப்பை அதிகமாக நேசித்தமைக்கான காரணங்கள் மூன்று எழுதுக.
  4) மோசேயின் வாழ்வு உமக்கு எவ்விதம் வழிகாட்டலாய் அமையும் என்பதற்கு நான்கு விடயங்களைக் குறிப்பிடுக.

02. 1) பழைய மத்திய கிழக்கு ஞான இலக்கியத்தின் மரபுகள் இரண்டினைத் தருக?
  2) எபிரேய ஞான இலக்கியங்களின் காணப்படும் முக்கிய அம்சங்கள் இரண்டினைக் குறிப்பிடுக.
  3) எபிரேய ஞான இலக்கியத்தின் பிரிவுகள் மூன்றினை எழுதுக.
  4) கிறிஸ்தவர்களுக்கு ஞான நூல்கள் எவ்விதம் பயனுடையதாக அமைகின்றன என்பதனை நான்கு கருத்துக்கள் மூலம் விளக்குக.

03. 1) இயேசு திவ்விய நற்கருணையை ஏற்படுத்தியதைப் பற்றிக் குறிப்பிடும் இரு பாரம்பரியங்களையும் எழுதுக.
  2) திருத்தொண்டர் பிலிப்புவால் ஆற்றப்பட்ட பணிகள் இரண்டினைக் குறிப்பிடுக.
  3) கலாபனைக் காலத்தில் கிறிஸ்தவர்களிடம் மிளிர்ந்த பண்புகள் மூன்று தருக.
  4) புனித அகுஸ்தீனாரின் வாழ்வின் மூலம் ஒரு கிறிஸ்தவன் பெற்றுக் கொள்ளக்கூடிய படிப்பினைகள் நான்கைக் குறிப்பிட்டு விளக்குக.

## பகுதி II

04\. 1) இறைவாக்கினர்களின் போதனைகளில் மெசியா பற்றிய படிப்பினைகள் முக்கியமானது இது பற்றி ஐந்து விடயங்களை முன்வைத்து விளக்குக.

2) இறைவாக்கினரின் போதனைகள் இன்றைய எமது சமூகத்திற்கும் பொருந்தும் என்பதனை ஐந்து எடுத்துக் காட்டுகள் மூலம் விளக்குக.

05\. 1) புதிய ஏற்பாட்டுக் காலத்து பாலஸ்தீனாவின் அரசியல் பின்னணி பற்றி ஐந்து விடயங்களை விபரிக்குக.

2) மத்தேயு நற்செய்தியின்படி திருச்சபை பொழிவிலுள்ள விடயங்கள் ஐந்தை விளக்குக.

06\. 1) புனித பவுல் குடும்ப வாழ்வு பற்றி எபேசியர் திருமுகத்தில் முன்வைக்கும் கருத்துக்கள் ஐந்தை விளக்குக.

2) ஒரு கிறிஸ்தவன் எவ்விதம் தமது வாழ்வை அமைத்துக் கொள்ள வேண்டும் என்பதை பிலிப்பியர் திருமுகத்தின் அடிப்படையில் ஐந்து விடயங்களை முன்வைத்து விபரிக்குக.

07\. 1) ஆரம்ப காலத்திருச்சபைத் தந்தையர்கள் பற்றி ஐந்து விடயங்களை முன்வைத்து விளக்குக.

2) கிறிஸ்தியல் பொதுச்சங்கங்கள் மூலம் முன்னெடுக்கப்பட்ட பணிகள் பற்றி ஐந்து விடயங்களை விபரிக்குக.

08\. 1) ஆறாம் நூற்றாண்டில் திருச்சபையில் நிகழ்ந்த முக்கிய விடயங்கள் ஐந்தினை குறிப்பிட்டு விளக்குக.

2) இரண்டாம் வத்திக்கான் சங்கம் பற்றி ஐந்து விடயங்களை விபரிக்குக.